# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

**முறையீட்டு மனு எண் 475/2016/பேட2**

**ஆணை எண்.259 /2017/நாள் –23–11–2017**

**திரு சி.ஆர். வேதகிரி ,**
**4, வடக்குத் தெரு,**
**திருக்கழுக்குன்றம்,**
**காஞ்சிபுரம் மாவட்டம்.** --- மனுதாரர்

**செயல் அலுவலர்,**
**திருக்கழுகுன்றம் தேர்வுநிலை**
**பேரூராட்சி,**
**திருக்கழுக்குன்றம்** --- எதிர் மனுதாரர்.

ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுகுன்றம் தேர்வு நிலை பேரூராட்சி, எண்.4, வடக்குத் தெரு, மங்கலம், திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த திரு சி.ஆர் வேதகிரி என்பவரது 14.06.2016ம் நாளிட்ட முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 15526/2014/இ.2/நாள் 13.05.2016 மூலம் இம்முறை மன்ற நடுவத்தில் 30.05.2016ல் பெறப்பட்டு 475/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) 2015 விதி 6ல் கண்டவாறு ரூ 10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் விதிகளின்படி சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.475/2016/பே.2/நாள 02.06.2016ல் ஆணையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்படி முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில்

15.062016ல் பெறப்பட்டு, மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு சி.ஆர். வேதகிரி முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், காஞ்சீபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் பேரூராட்சி, மங்கலம் பகுதியில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய செயல் அலுவலர், பேரூராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர்களால் பொதுமக்கள் பயன்பெறும் வண்ணம் குடிநீர் குழாய் இணைப்பு கொடுத்தாகவும் மேற்படி குழாயினை 19.06.2014 அன்று காலை திரு சீனுவாசன், மற்றும் வார்டு கவுன்சிலருமான திரு .D. யுவராஜ் ஆகியோர் JCB மூலம் மேற்படி குழாய் இணைப்புகளை உடைத்ததாக தனது மனுவில் தெரிவித்துள்ளார். மேலும் மங்கலம் பட்டிக்காடு செல்லும் சாலை நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமானது எனவும் இச்சாலையினை சிமெண்ட் சாலையாக அமைப்பதற்காக பள்ளம் தோண்டுவதாக தெரிவித்து மேற்படி குழாய் இணைப்பினை துண்டித்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி ஒப்பந்தக்காரர் மற்றும் வார்டு கவுன்சிலர் ஆகியோர் மேற்படி சாலையில் 02.07.2014 அன்று காலை குழாய் பதிக்கும் பணிக்கு JCB மூலம் பள்ளம் தோண்டும்போது பல இடங்களில் தொலைபேசி கேபிள் ஒயர் துண்டு துண்டாக வெட்டபட்டு தொலைத் தொடர்புத் துறைக்கும் தொலைபேசி சந்தாதாரர்களுக்கும் பெரிய இழப்பினை ஏற்படுத்தியதாகவும், இது குறித்து எடுத்துக் கூறியும் உள் நோக்கத்தோடு செயல்பட்டதாகவும் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார்.

மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை அனுப்பக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 475/2016/பே.2/நாள் 22.06.2015ன் மூலம் பேரூராட்சி செயல் அலுவலர், திருக்கழுகுன்றம் தேர்வு நிலை பேரூராட்சிக்கு ஆணையிடப்பபட்டது.

திருக்கழுகுன்றம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர், தனது கடித எண் 476/2014/அ.2/நாள் 12.07.2016ன் மூலம் தனது விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமா்ப்பித்துள்ளார்.

"....காஞ்சீபுரம் மாவட்டம், திருக்கழுகுன்றம் பேரூராட்சியில் சுமார் 11.20 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட 18 வார்டுகளை உள்ளடக்கிய பேரூராட்சி எனவும் இப்பேரூராட்சியில் 6வது வார்டு பகுதியானது பெரும்பாலும் மாநில மற்றும் ஊரக நெடுஞ்சாலையினை ஒட்டியே உள்ளதாக தெரிவித்துள்ளார். இந்நேர்வில் மாமல்லபுரம் சாலையில் சுமார் 2.00 கிலோமீட்டர் நீளமுள்ள சாலையில் வரும் மழை நீர் வழிந்தோட கால்வாய் இல்லாமல் சாலையில் சென்று கொத்திமங்கலம் ஊராட்சி எல்லை-திருக்கழுகுன்றம் பேரூராட்சி எல்லையினை பிரிக்கும் பட்டிக்காடு சாலை வழியாக சென்று பின்னர் 7 வது வார்டு வருவாய் கால்வாயில் சென்றடைவதாகவும் தெரிவித்துள்ளார். இவ்வாறு மழை நீர் கால்வாயில் செல்லும்போது மேற்குபக்கம் உள்ள பேரூராட்சி எல்லையில் உள்ள குடியிருப்பு வீடுகளில் வெள்ள நீர் புகுந்து விடுவதன் காரணமாக அப்பகுதி மக்கள் பல ஆண்டுகளாக அப்பகுதியில் மழை நீர் கால்வாய் அமைக்க கோரிக்கை வைத்து வந்ததாலும், அப்பகுதி வார்டு உறுப்பினர் திரு து.யுவராஜ் என்பவரது கோரிக்கையின்பேரிலும் பேரூராட்சி மன்ற தீர்மானத்தால் 2013-2014ம் ஆண்டு

பொது நிதியில் பட்டிக்காடு சாலை மேற்குபக்கம். பேரூராட்சி எல்லை பக்கம் கால்வாய் அமைக்க ரூ 7.85 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்டத்தின்படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு குறைவான விலை விகிதம் அளித்த ஒப்பந்தக்காரர் திரு சி.எஸ் .சீனிவாசன். என்பவருக்கு பணி உத்திவு வழங்கப்பட்டதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் திரு சி.ஆர். வேதகிரி புகார் மனுதாரர் மேற்படி பட்டிக்காடு சாலையில் கால்வாய் அமைக்கக்கூடாது என புகார் அளித்ததின் காரணமாக அப்பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி கைவிடப்பட்டதாக தனது அறிக்கையில் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேலும் திரு சி.ஆர். வேதகிரி என்பவருக்கும் 6வது வார்டு உறுப்பினர் திரு து. யுவராஜ் என்பவருக்கும் பல ஆண்டுகளாக அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக முன் விரோதம் இருந்து வருவதால் தேவையற்ற புகார்கள் அளிக்கப்பட்டு வருவதாகவும், இதே புகார் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கும் அனுப்பப்பட்டு இப்பேரூராட்சியால் உரிய பதில் வழங்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 475/2016/பே.2/நாள் 02.11.2016ல் திருக்கழுகுன்றம் பேரூராட்சி மங்கலம் பட்டிக்காடு சாலையில் தண்ணீர் குழாய் பைப்லைன் பள்ளம் தோண்டுபோது சேதமடைந்தது சரிசெய்யப்பட்டவிவரத்தினை தெரிவிக்க கோரி பேரூராட்சி செயல் அலுவலர், திருக்கழுகுன்றம் அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், திருக்கழுகுன்றம் தனது கடித எண் 476/2014/அ.2/நாள் 18.11.2016ல் காஞ்சீபுரம் மாவட்டம், திருக்கழுகுன்றம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட 6வது வார்டு பட்டிக்காடு சாலையில் புதியதாக குடிநீர் பகிர்மாண குழாய் பதித்தல் பணியின்போது சேதமடைந்த பொதுக்குழாய் 19.10.2016 அன்று மீண்டும் நிறுவப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு சி.ஆர். வேதகிரி அவர்களின் முறையீடு குறித்து நேரடி விளக்கம் பெற இம்முறைமன்ற நடுவத்தில் 07.09.2017 அன்று ஆஜராக கோரி இம்முறைமன்ற நடுவ அறிப்பாணை எண் 475/2016/பே.2/நாள் 01.08.2017ன் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

திரு சி.ஆர். வேதகிரி, முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 08.09.2017ல் தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

......"14.06.2016ம் தேதியிட்ட முறையீட்டு மனு தன்னால் அனுப்பிவைக்கப்பட்டதாகவும், இதில் திருக்கழுகுன்றம் பேரூராட்சி மன்ற 6வது வார்டு உறுப்பினர் திரு யுவராஜ் மற்றும் செயல் அலுவலர் மற்றும் அப்போதிருந்த தலைமை எழுத்தர் , திருக்கக்முகுன்றம் மாமல்லபுரம் சாலையில் 6 வது வார்டில் கழிவுநீர் கால்வாய் கட்டுவதற்கு வந்ததாகவும் தான் இதற்கு ஆட்சேபணை செய்ததாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு அனுப்பவேண்டும் என்பது தனக்கு தெரியாது எனவும், தான் பல்வேறு அலுவலகத்திற்கும் மாண்புமிகு அமைச்சர் மற்றும் பல்வேறு நபருக்கு அனுப்பி இருந்தததகவும்

அது முறைமன்ற நடுவத்திற்கு வந்து விட்டது எனவும் திருக்கழுகுன்றம் பேரூராட்சியில் என்ன குறைபாடுகள் உள்ளது என்பது குறித்து 15 நாட்களில் மீண்டும் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைப்பதாகவும் உறுதி அளித்துள்ளார்.

ஆனால் மேற்படி முறையீட்டு மனுதாரர் புகார் மனு எதுவும் இம்முறைமன்ற நடுவத்திற்கு இதுவரை அனுப்பவில்லை. இருப்பினும் தனது 20.09.2017ம் நாளிட்ட கடிதத்தில் ஏற்கனவே ஒப்பந்தக்காரரால் பழுதாக்கப்பட்ட குடிநீர் குழாயினை மீண்டும் அதே இடத்தில் திருக்கழுகுன்றம் பேரூராட்சி செயல் அலுவலர் பொருத்தி பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் செய்து கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துள்ளார். அதேபோன்று பழுதடைந்த தொலைபேசி இணைப்புகளுக்கான கேபிள்களும் சரி செய்யப்பட்டுள்ளன எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் நெடுஞ்சாலை அலுவலகத்திற்கு பக்கத்தில் செல்லக்கூடிய கழிவு நீர் கால்வாயை ஊருக்குள் கொண்டு வந்து அசுத்தப்படுத்தப்படுவது குறித்து பல்வேறு மனுக்கள் அரசு உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியதன் பிறகு பல மாதங்கள் கழித்து மேற்படி சாலையில் 100 மீட்டர் தூரத்திற்கு எந்த பணியும் செய்யக்கூடாது என அறிவுறுத்தியவுடன் மங்கலம் பெரிய தெருவில் இருபுறமும் மசிமெண்ட் கால்வாய் அமைக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் இக்கால்வாயினை அடைத்து திரு து. யுவராஜ் கவுன்சிலர் அவர்களின் உறவினர் நெடுஞ்சாலை அலுவலகத்திற்கு அருகாமையில் கழிவு நீர் கால்வாயினை ஆக்கிரமித்து கடைகள் கட்டியுள்ளதால் மழைக்காலங்களில் கழிவு நீர் வழிந்தோட வழி இல்லாமல் ஊருக்குள் புகுந்துவிடுகிறது எனவும் மேற்படி நபர் ஆக்கிரமித்துள்ள இடத்தினை அப்புறப்படுத்த கோரி ஆட்சேபணை மனுக்கள் பலர் மூலம் சென்றவுடன் மேற்படி மங்கலம் பட்டிக்காடு சாலையின் ஒரு பக்கம் மட்டும் கால்வாய் பணி அமைப்பது கைவிடப்பட்டதாகவும் இதன் மூலம் பேரூராட்சிக்கு சில லட்சம் ரூபாய் மீதப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிதுள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க கடிதம் முறையீட்டு மனுதாரரின் நேரடி விளக்கம் ஆகியவை மிக கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன. இதில் காஞ்சீபுரம் மாவட்டம், திருக்கழுகுன்றம் பேரூராட்சி 6 வது வார்டு மங்கலம்பட்டி என்னுமிடத்தில் சிமெண்ட் சாலை அமைக்க பள்ளம் தோண்டப்பட்ட போது சேதமுற்ற குடிநீர்க் குழாய் மற்றும் தொலைபேசி கேபிள்கள் சரி செய்யப்பட்டதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். இக்குறைபாடுகள் யாவும் மேற்படி கவுன்சிலரின் பதவிக்காலம் முடிந்த நிலையில் செயல் அலுவலர்கள் உடனடியாக அந்தந்த பணிகளை மேற்கொள்வதாக முறையீட்டு மனுதாரரும் தனது 20.09.2017ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே இனி வருங்காலங்களில் இவ்விதமான புகார்களுக்கு இடமளிக்காவண்ணம் செயல்பட பேரூராட்சி செயல் அலுவருக்கு தெரிவித்து மனுதாரர் தெரிவித்துள்ள புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள பணிகள் சீரமைக்கப்பட்டுவிட்டதாக முறையீட்டு மனுதாரரே தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதையும் தொடர்ந்து இப்புகார் மனு மீதான தொடர் நடவடிக்கை கைவிடலாமெனக் கருதி அவ்வாறே இவ்வழக்கு முடித்து வைத்து ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23 -ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

-//உத்திரவின்படி - **அனுப்பப்படுகிறது//-**

செயலாளர்.

பெறுநர்

1.திரு சி.ஆர். வேதகிரி

4, வடக்குத் தெரு,

**திருக்கழுக்குன்றம்,**

**காஞ்சிபுரம் மாவட்டம்.**

**2. செயல் அலுவலர்,**

**திருக்கழுகுன்றம் தேர்வுநிலை பேரூராட்சி,**

**திருக்கழுக்குன்றம்**